C.C.No. 05/2023
நாள்:  23.09.2025
நேரம்: 12.20
P.W– 1:  குமரவேல்,  த/பெ. கிழவன்

1, 2 எதிரிகள் ஆஜர்.

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்திய பிரமாண வாக்குமூலம் செய்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக அனுமதிக்கப்படுகிறார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

எனக்கு காயம் இல்லை என்பதால் நான் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்று நீதிமன்ற சாட்சியத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் புகார் அளித்தபோது ஆபாசமாக எனது மனைவியை எதிரிகள் பேசியதாக கூறிவிட்டு, நீதிமன்ற சாட்சியத்தின்போது அந்த வார்த்தைகள் என்ன என்பதை குறிப்பிட்டு கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் நீதிமன்ற சாட்சியத்தில் எதிரிகள் என்னை தாக்கியதை மட்டும் கூறிவிட்டு, எனது மனைவியை தாக்கியதை பற்றி கூறவில்லை என்றால் நான் அடிபட்டு கீழே விழுந்து, என்னை அடித்து கொண்டிருந்ததால் நான் கவனிக்கவில்லை. நான் ஒரு இதயநோயாளி என்றால் சரிதான். இதயநோயாளியாக நான் இருக்கும் பட்சத்தில் எனது மார்பின் மீது ஒருவர் தாக்கும் போது எனக்கு மருத்துவ உதவி கட்டாயம் தேவைப்படும் என்றாலும், சம்பவம் நடந்தது உண்மையாக இருந்திருந்தால் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றிருப்பேன் என்றாலும் சரியல்ல, எனக்கு வலப்பக்க மார்பில் தான் அடிப்பட்டது, மேலும் நான் தற்போது வரையிலும் இதய நோய்க்கான மருந்து மாத்திரைகளை உட்கொண்டு தான் வருகிறேன், அதனால் மருத்துவமனைக்கு செல்லவில்லை.

சம்பவம் நடந்ததாக சொல்லப்படுகிற அதே தேதியில், அதே சமயத்தில் நானும், எனது மனைவியும் சேர்ந்து 2 வது எதிரிக்கு பலத்த காயம் பட்டு அவர் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் அப்படி ஒரு சம்பவம் நடைபெறவே இல்லை. எதிரிகள் என்மீது மேற்படி சம்பவம் தொடர்பாக புகார் அளித்து வழக்கு பதிவு செய்யப்பட்டு, தற்போது அது நீதிமன்ற விசாரணையில் இருந்து வருகிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. எங்களது செயலால் எதிரிகள் காயம் அடைந்து மருத்துவமனையில் 2 வது எதிரி அனுமதிக்கப்பட்டு, அதன் விளைவாக எங்கள் மீது வழக்கு ஏற்பட்டுவிடும் என்ற அச்சத்தில், நான் முந்திகொண்டு எதிரிகள் மீது பொய்புகாரை அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

எனது உடன்பிறந்த சகோதரர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் என்றால் சரிதான். நான் எங்கள் ஊரில் உள்ள வாழவந்தான் அம்மன் கோவிலின்

முன்னாள் தலைவர் என்றால் சரியல்ல. நான் ஊர்த்தலைவராக இருந்து வந்தேன் என்றால் பஞ்சாயத்து தலைவராக இருந்து வந்தேன். நான் அரசியல் செல்வாக்கு மிகுந்தவர் என்பதால் எனது செல்வாக்கை பயன்படுத்தி, எதிரிகள் மீது போலிசார் பொய்யாக வழக்கு பதிவு செய்து அதன் நிமித்தம் இறுதி அறிக்கை தாக்கல் செய்ய உறுதுணையாக இருந்தேன் என்றால் சரியல்ல.

நான் பஞ்சாயத்து தலைவராக இருந்தபோது, நான் பொருளாதார முறைகேடு செய்து, என்னை கேள்வி கேட்கும் நபர்கள் மீது பொய் வழக்கு போடுவது எனது வழக்கம் என்றால் சரியல்ல. எங்கள் ஊரில் பல்வேறு சமுதாயத்தை சேர்ந்த மக்கள் வாழந்து வருகிற நிலையில் அவர்களுக்கென தனித்தனி கோவில்கள் உள்ளன என்றால் எங்கள் ஊரில் உள்ள அம்மன் கோவிலும், அய்யனார் கோவிலும் அனைவருக்கும் சரிசமமானது, அதில் அனைவரும் வந்து சாமி தரிசனம் செய்வார்கள்.

நான் ஊர்த்தலைவராக இருக்கும் போது அரசானது ஊர்மக்களின் நலனுக்காக ஒரு டிராக்டர் வழங்கியது என்றாலும், அதை நான் என் பெயரில் பதிவு செய்து கொண்டேன் என்றாலும் சரிதான், ஆனால் குழு தீர்மானத்தின்பேரில் குழுதலைவர் என்ற முறையில் என் பெயரில் பதிவு செய்யப்பட்டது. நான் அரசால் மேற்படி டிராக்டருக்கு வாடகை பணமாக நிர்ணயம் செய்யப்பட்ட தொகையை விட ஊர்மக்களிடம் அதிக பணம் வாடகை நிமித்தம் வசூல் செய்தேன் என்றால் சரியல்ல. நான் தற்போது ஊர்த்தலைவராக இல்லாத நிலையிலும், தற்போது வரையிலும் அந்த டிராக்டர் என் பெயரில் உள்ளது என்றால் குழுவின் முடிவின் படி உள்ளது.

எனக்கோ, எனது மனைவிக்கோ ஏற்பட்ட காயத்திற்கு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்து கொண்டதாகவோ அல்லது வீட்டிலேயே மருந்து மாத்திரைகள் உட்கொண்டதாகவோ புகாரிலோ, போலிசார் என்னை விசாரணை செய்தபோதோ நான் சொல்லவில்லை என்றால் சரிதான். அதனால் முகாந்திரம் இன்றி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது புகாருக்கு உறுதி செய்யும் விதமாக எந்த சாட்சியத்தையும், புகாருடன் இணைத்து போலிசாரிடம் கொடுக்கவில்லை என்றால் என்வசம் அவ்வாறு சாட்சியங்கள் எதுவும் இல்லை, ஆனால் புகாரிலேயே நால்வர் சண்டையை பார்த்து, சண்டையை விலக்கியதாக குறிப்பிட்டுள்ளேன். எதிரிகள் அப்பாவிகள் என்றாலும், அவர்களின் வாழ்வை கெடுக்கும் நோக்கில் பொய் புகார் அளித்து, பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2025.09.23 12:38:57 +0530

C.C.No. 05/2023
நாள்: 23.09.2025
நேரம்: 12.40

P.W– 2: கருணபூபதி, க/பெ. குமரவேல்

1, 2 எதிரிகள் ஆஜர்.

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்திய பிரமாண வாக்குமூலம் செய்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :

எனது கணவர் அளித்த புகாரை பற்றிய விவரங்கள் எனக்கு தெரியும். நானும், எனது கணவருடன் புகார்அளிப்பதற்காக காவல் நிலையம் சென்றேன் என்றால் சரிதான். அந்த புகாரை நான் தான் எழுதி கொடுத்தேன் என்றால் சரியல்ல, எனக்கு எழுத, படிக்க தெரியாது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் என்னவென்றால் காலை 8.00 மணி. நான் அந்த சமயத்தில் வீட்டிற்குள் இருந்தேன். நான் வீட்டிற்குள் இருந்த நிலையில், எவ்வாறு சம்பவத்தை தெரிந்து கொண்டேன் என்றால், 1ம் எதிரி எனது வீட்டின் வாசலுக்கு வந்து, அத்தை இங்க வாங்கன்னு கூப்பிட்டார், அதனால் சென்றேன். 1ம் எதிரி என்னை அழைத்தபோது ஆபாச வார்த்தை என்னை பேசவில்லை, ஆனால் வெளியே வந்தபோது தான் பேசினார்.

1ம் எதிரி என்னை அழைத்தபோது, எனது கணவர் எங்கள் வீட்டில் குளியலறையில் குளித்து கொண்டிருந்தார். சம்பவத்தன்று எதிரிகள் என்னை அழைத்து, ஆபாசமாக பேசி, அதன்பிறகு எனது கணவர் வந்து, அவரை எதிரிகள் தாக்கினார்களா அல்லது எனது கணவர் தாக்கப்பட்டவுடன் நான் சென்றேனா என்றால் முதலில் 1ம் எதிரி என்னை அழைத்தவுடன் நான் வெளியே சென்ற போது, 1ம் எதிரி என்னிடம் நான் தானே பெயிண்ட் அடித்தேன், எதற்காக என்னை திட்டினீர்கள் என்று கேட்டார். நான் அவர்களிடம் திட்டவில்லை என்று சொன்னவுடன் எதிரிகள் என்னை ஆபாசமாக பேசி, அதன் பிறகு எனது கணவர் வந்தவுடன் எதிரிகள் எனது கணவரையும் அடித்தார்கள்.

எங்கள் வீட்டின் அருகே கண்மாய் உள்ளது என்றாலும், அந்த கண்மாயில் குளிப்பதற்காக எதிரிகள் வந்தபோது, நான் தான் அவர்களிடம் வாய்தகராறில் ஈடுபட்டேன் என்றாலும் சரியல்ல. எதிரிகள் இருவரும் இருசக்கர வாகனத்தில் வந்தார்கள். அந்த வாகனம் பற்றிய விவரங்கள் எனக்கு தெரியாது. எனக்கு சம்பவத்தின்போது அடிபட்டு, நான் மருத்துவமனைக்கு சென்றதாக நீதிமன்ற சாட்சியத்தில் கூறவில்லை என்றால் அது பற்றி எனக்கு நினைவில் இல்லை. எனது முதல் விசாரணை சாட்சியத்தில் எனது கணவரை எதிரிகள் தாக்கி,

அதன்பிறகு நான் சென்றபோது எதிரிகள் என்னை ஆபாசமாக பேசி, எனது கணவரை அடித்து விட்டதாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல, அப்படி நான் கூறவில்லை. எனது முதல் விசாரணை சாட்சியத்தில் எனது கணவருக்கு மட்டுமே காயம்பட்டதாக கூறியுள்ளேன் என்றாலும், எனக்கு காயம்பட்டதாக கூறவில்லை என்றாலும் நான் எங்கள் இருவருக்குமே காயம்பட்டதாக கூறவில்லை. சம்பவத்தின்போது எங்கள் இருவருக்குமே காயம் இல்லை, ஆனால் 2ம் எதிரி எனது கணவரை அடித்தது மட்டும் உண்மை. நானும், எனது கணவரும் மாற்றி மாற்றி பொய்யான சாட்சியம் அளிக்கிறோம் என்றால் சரியல்ல.

நான் கூறியதுபோல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், எனது கணவர் பஞ்சாயத்து தலைவராக இருந்தபோது அவர் செய்த முறைகேடுகளை எதிரிகள் தட்டி கேட்டதால் அவர்மீது எனது கணவர் பொய்யாக புகார் அளித்து அதை அனுசரித்து நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல

**மறுவிசாரணை – இல்லை.**

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2025.09.23 12:57:18 +0530